செய்தி வெளியீடு எண். 88 நாள்.10.02.2017

# திருவள்ளூர் மாவட்டத்தில் உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு பெண்கள் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு "ஔவையார் விருது" வழங்கப்படவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் 2016-17ம் ஆண்டிற்கான உலக மகளிர் தின விழா (08.03.2017) கொண்டாடும்போது பெண்கள் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த ஒருவருக்கு "ஔவையார் விருது" வழங்கப்பட உள்ளது. இவ்விருதினை பெற தகுதி வாய்ந்த நபர்கள் உரிய சான்றுகளுடன் 11.02.2017 முதல் 17.02.2017 அன்று மாலை 05.00 மணிக்குள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தளத்தில் இயங்கிவரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தில், மாவட்ட சமூகநல அலுவலரை தொடர்பு கொண்டு விண்ணப்பித்து பயன்பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

2017-ம் ஆண்டு ஔவையார் விருது வழங்கும் பொருட்டு கருத்துருக்கள் அனுப்புவதற்கான விதிமுறைகள். தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவர், 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். சமூக நலனைச் சார்ந்த நடவடிக்கைகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை மொழி, இனம், பண்பாடு, கலை அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து மக்களுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றுபவராக இருத்தல் வேண்டும். என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~